DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.1 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC.14/ 2017 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 1 |
| Name | திருமதி. பேச்சியம்மாள் |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

**(எதிரிகள் ஆஜர் )**

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 09-06-2023.

**முதல்விசாரணை**

1. நான் தோட்டாகுடியில் குடியிருக்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும்.

2. நான் பிறந்து வளர்ந்தது வல்லக்குளம் ஆகும். ஆஜர் எதிரிகள் எனது சித்தி மற்றும் அவர்களது மகள் மற்றும் மகளின் கணவர் ஆவார். கடந்த 29.11.2016 ம் தேதி மதியம் சுமார் 1.00-2.00 மணி அளவில் வல்லக்குளத்தில் உள்ள எனது தகப்பனார் எனக்கு உயில் மூலம் எழுதிக்கொடுத்த எங்களுக்கு சொந்தமான வயலில் நாற்று போடவேண்டும் என்று சொல்லி சுப்புக்குட்டி என்பவரை அழைத்துச்சென்றேன். அப்போது தேவடியா என்று கெட்டவார்த்தை பேசி, உனக்கு எந்த உரிமையயும் கிடையாது என்று சொல்லி, 1ம் எதிரி என்னை முதுகில் குத்திவிட்டார். மற்ற எதிரிகள் என்னை மிதித்து விட்டார்கள்.

2. அதனால் எனக்கு மயக்கம் ஏற்பட்டது. நான் சிறிது நேரம் கழித்து மயக்கம் தெளிந்து எனது கணவருக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பின்னர் ஆட்டோவில் திருநெல்வேலி அரசுமருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றோம். உடன் எனது கணவரும் வந்தார்.

3. அங்கு வந்த காவலர்கள் என்னிடம் நடந்த விபரத்தை கேட்டார்கள். நான் சொன்னேன், அவர்கள் புகார் வாக்குமூலமாக பதிவுசெய்தார்கள். என்னிடம்

வாக்குமூலத்தில் உள்ள பேச்சியம்மாள் என்ற கையொப்பம் என்னுடையதுதான்.

4. **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

5. எனது ஊர் நாங்குநேரி தாலுகாவில் உள்ளது என்றால் ஆமாம். வல்லக்குளத்திற்கு அடிக்கடி பஸ்வசதி இல்லை என்றால் ஆமாம். அரசர் குளம் பஸ் செல்லும். நான் எத்தனை மணிக்கு வல்லக்குளம் வந்தேன் என்றால் நேரம் எனக்கு சரியாக நினைவில் இல்லை.

6. டிராக்டரை யார் ஓட்டி வந்தார்கள் என்றால் சுப்புக்குட்டி என்பவர் ஓட்டி வந்தார். எனது அப்பா வல்லக்குளத்தில் தான் வாழ்ந்து வந்தார்கள். எனது அப்பா இரண்டாவது எதிரி பட்டுக்கனி என்பவருடன் சேர்ந்து வாழ்ந்து வந்தார்கள் என்றால் சரிதான். அப்போது எல்லாரும் சேர்ந்து தான் விவசாயம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான்

7. எனது அப்பாவுக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்த போதும், எதிரிகள் தான் அந்த இடத்தில் விவசாயம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். இடம் சம்மந்தமாக உயில் பதிவு செய்யப்படவில்லை என்று திருச்செந்துார் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்,

8. எதிரிகள் நாங்கள் விவசாயம் செய்கிறோம். விவசாயத்தை அழிக்க கூடாது என்று சொன்னஉடன் டிராக்டரில் வந்தவர் சென்று விட்டாரா என்றால் இல்லை. என்னை அடித்த உடன் தான் சென்றார்.

9. என்னை அடிக்க சொன்ன உடன் டிராக்டர் ஓட்டுநர் பயந்து போய் சென்றுவிட்டார். நான் மயங்கி கிடந்த விபரம் எல்லாம் அவருக்கு தெரியாது என்றால் சரிதான். நான் எவ்வளவு நேரம் கழித்து மயக்கம் தெளிந்தேன் என்றால் சரியாக சொல்ல இயலாது. நான் சுமார் 2 மணி நேரம் கழித்து மயக்கம் தெளிந்தேன் என்றால் சரியாக சொல்ல இயலாது.

10. நான் மயங்கி விட்டேன் என்ற விபரத்தை போலீசாரிடம் சொல்லி உள்ளேன் என்றால் சொல்லி உள்ளேன். போலீசார் சம்பவ இடத்திற்கு எப்போது வந்தார்கள் என்றால் மருத்துவமனைக்கு தான் வந்தார்கள். நான் யார் ஆட்டோவில் மருத்துவமனைக்கு சென்றேன் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

11. நான் சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில் என்னை எதிரிகள் தாக்கவில்லை என்றால் சரியல்ல. நான் தொடர்ந்து எனது வகையாட்கள் மூலம் எதிரிகள் விவசயாம் செய்த வயலை இடைஞ்சல் செய்து வந்தோம் என்றால் சரியல்ல.

12. வயலை என் அனுபவத்தில் எடுக்க முடியவில்லை என்பதால் நானாக

எனக்கு காயம் ஏற்படுத்திக்கொண்டு பொய்யாக புகார் கொடுத்து உள்ளேன் என்றால் சரியல்ல. புகார் வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் முற்றிலும் பொய்யானது என்றால் சரியல்ல.

13. 2ம் எதிரியின் கணவர் (எனது அப்பா) 2வது எதிரிக்கு தான் உயில் எழுதிக்கொடுத்தார் என்றால் இல்லை. அதனால் எதிரிகள் தான் பிரச்சனைக்குரிய சொத்தை இன்றுவரை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் தான் வெளியாட்களை அழைத்துச்சென்று பிரச்சனை செய்து வந்தேன் என்றால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1
ஸ்ரீவைகுண்டம்.

DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.1 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC.14/ 2017 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 2 |
| Name | திரு. பேச்சிமுத்து |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

**(எதிரிகள் ஆஜர் )**

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 09-06-2023.

**முதல்விசாரணை**

1. நான் தோட்டாகுடியில் குடியிருக்கிறேன். நான் இரயில்வே கேண்டினில் வேலை செய்கிறேன். அ.சா.1 எனது மனைவி ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும்.

2. கடந்த 29.11.2016 ம் தேதி காலை எனது மனைவி அவர் பெயருக்கு உயில் உள்ள சொத்தை கேட்க போவதாக சொன்னார்கள். போகும் போது வயலை உழுவதற்காக டிராக்டரை அழைத்துச்சென்று உள்ளார்கள். எதிரிகள் அனைவரும் எனது மனைவியிடம் உனக்கு சொத்து கிடையாது என்று அவதூறாக பேசி, எனது மனைவியை அடித்து உள்ளார்கள். எனது மனைவி மயங்கி உள்ளார்.

3. பின்பு உழுவதற்கு டிராக்டரை கொண்டு வந்த நபர் பயந்து ஓடிவிட்டார்கள். பின் சிறிது நேரம் கழித்து மயக்கம் தெளிந்து எனது மனைவி எனக்கு போன் செய்தார். ஆம்புலன்சுக்கு போன் செய்தும்

ஆம்புலன்ஸ் வரவில்லை.

4. ஒரு ஆட்டோ பிடித்து வரச்சொன்னேன். அந்த வழியாக வந்த ஒரு ஆட்டோவில் ஏறி திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு எனது மனைவி வந்தார். நானும் மருத்துவமனைக்கு சென்று விட்டேன். அப்போது நேரம் மாலை 3.00 மணி இருக்கும்.

5. மறு நாள் சேரக்குளம் காவல் நிலையத்தார் வந்து விசாரித்து எனது மனைவியிடம் வாக்குமூலம் பதிவுசெய்தார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள அறிவேன் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

6. போலீசார் என்னை விசாரித்த போது எனது மனைவி எனக்கு போன் எத்தனை மணிக்கு செய்தார் என்ற விபரத்தை நான் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது மனைவி எத்தனை மணி நேரம் மயக்கத்தில் இருந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

7. யார் ஆட்டோ என்ற விபரம் எனக்கு தெரியாது. டிராக்ட்டரை ஓட்டி வந்த நபரும் எனக்கு தகவல் கொடுக்கவில்லை என்றால் சரிதான். டிராக்டர் ஓட்டி வந்த நபர் எப்போது சென்றார் என்ற விபரமும் எனக்கு தெரியாது.

8. வடிவேல் இடம் சம்மந்தமாக திருச்செந்துார் சார்பு நீதிமன்றத்தில் ஒரு வழக்கு நடைபெற்று வருகிறது என்றால் சரிதான். எதிரிகள் விவசாயம் செய்வதை நானும், எனது மனைவியும் அத்துமீறி இடையூறு செய்தோம் என்றாலும், தபசில் சொத்தை நாங்கள் அனுபவிக்க முடியாததால் எனது மனைவியை வைத்து நானே காயத்தை ஏற்படுத்திவிட்டு எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்து உள்ளோம் என்றால் சரியல்ல.

9. நான் சொன்ன நாள், நேரத்தில் எனது மனைவி சம்பவ இடத்திற்கு

செல்லவில்லை என்றாலும், எதிரிகள் எனது மனைவியை அவதூறாக பேசவில்லை என்றாலும், காயப்படுத்தவில்லை என்றாலும் சரியல்ல.

10. நாங்கள் எப்படியாவது எதிரிகளை அடிபணியவைத்து சொத்தை பறிக்க வேண்டும் என்று செயல்பட்டோம் என்றால் சரியல்ல. நாங்கள் எதிரிகளை அடிபணியவைக்க நினைக்கவில்லை. உயில் பிராகாரம் தான் சொத்தை கேட்க எனது மனைவி சென்றார். உயில் எங்களால் போலியாக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1
ஸ்ரீவைகுண்டம்.